# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

## O.S.93/2023

## CNR.No.TNCB19000

Date:18.12.2024 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சுப்பம்மாள் | **வயது** | 75 |
| க/பெ | கந்தசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | கெண்டேபாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 18th December 2024.

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. எனது வழக்குரையில் சொல்லி உள்ள சங்கதிகள் பற்றிய விபரம் எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதி தங்கராஜ் என்னுடன் பிறந்தவர். தாவா சொத்தின் விஸ்தீரணம், செக்குபந்தி, காலை எண் ஆகியவை பற்றி எனக்கு தெரியாது என்றால் எனக்கு படிக்க தெரியாது என்பதால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆகி 56 வருடம் ஆகிறது. எனக்கு திருமணம் ஆனதிலிருந்து என் கணவரின் வீட்டில் இருந்து வருகிறேன் என்றால் என் கணவர் 3 மாதத்தில் இறந்து விட்டார். அதிலிருந்து எனது தகப்பனார் வீட்டில் இருக்கிறேன்.

எனது தகப்பனார் ஈரண்ண கவுடர் எப்போது இறந்தார் என்றால் அவர் இறந்து 13 வருடங்கள் ஆகிறது. எனது தகப்பனார் இறக்கும்போது தாவா சொத்து குறித்து எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்து விட்டதாக பிராதிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை பற்றி விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை.

( வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.